# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 20, 2021 Weekly E-paper ● September 20, 2021


# சமூக நீதியின் சரித்திரம் தொடர்கிறது!

● சுப.வீரபாண்டியன்



## முடியட்டும் மோடி ஆட்சி!

தலையங்கம்

## நீட் தொற்றிலிருந்து மாணவர்களைக் காப்போம்!

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 20, 2021 Weekly E-paper ● September 20, 2021



## சமூக நீதியின் சரித்திரம் தொடர்கிறது!

● சுப.வீரபாண்டியன்

பெரியாரோடு முடிந்துவிடும் என்று நினைத்தார்கள். ஆனால் அய்யாவின் கருத்துகளை, அறிஞர் அண்ணா, தன் அரசின் வழியும், ஆசிரியர் வீரமணி சமூகத் தளத்தின் வழியும் கொண்டு சென்றார்கள். அண்ணாவின் வாழ்நாள் அறுபதுக்குள் முடிந்து விட்டது என்று அகமகிழ்ந்து சிலர் அதனைக் கொண்டாடினார்கள். அண்ணாவிற்குப் பின் தலைவர் கலைஞர் அதனை அதிரடியாக மக்களிடம் எடுத்துச் சென்றார்.

கலைஞருக்குப் பின் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். கலைந்து விட்டன திராவிடமும், சமூக நீதியும் என்று கணக்குப் போட்டார்கள். தளபதி சனாதனத்துக்குப் பணிந்து விடுவார் என்று தவறாக நம்பினார்கள். சமூக நீதியின் சரித்திரப் பயணம் தொடர்கிறது என்பதை இப்போது ஒவ்வொரு நாளும் நம் தளபதிதான் எதிரிகளின் நெற்றிப்பொட்டில் அறைந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்.

பெரியார் வல்லினம், அண்ணா மெல்லினம் என்றுதான் நாமே கருதினோம். ஆனால், வல்லினத்தை வரலாற்றில் பதிய வைத்த மெல்லினமாக அண்ணா திகழ்ந்தார். அதேபோலத்தான், கலைஞர் வல்லினம், தளபதி



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

கே.எஸ்.அழகிரி
தலைவர்

நாள் : 14.09.2021

அன்புடையீர்,

வணக்கம்.

தங்களின் திராவிடப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழா அழைப்பிதழ் கிடைத்தது. படித்து மகிழ்வுப் பெற்றேன். தங்களின் தலைமையில் சிறப்பாக நடைபெறும் விழாவில் முதலாமாண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களின் திருக்கரங்களால் வழங்கிடும் சிறப்பும்,

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களும், திராவிடர் கழகத்தின் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ. அருள்மொழி அவர்களும் இச்சிறப்புமிகு விழாவில் வாழ்த்துரை வழங்குவதும் திராவிடப் பள்ளியின் வளர்ச்சிக்கு மேன்மேலும் வித்திடும் செயலாகும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

தங்கள் அன்புள்ள,

(கே.எஸ். அழகிரி)

பெறுநர்

திருமிகு. சுப. வீரபாண்டியன் அவர்கள்
இயக்குநர், திராவிடப் பள்ளி
120, என்.டி.ஆர். சாலை
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600024



மெல்லினம் என்று பலரும் கருதினர். ஆடாமல், அசையாமல், ஆடம்பர அறிவிப்புகள் ஏதுமில்லாமல் தளபதி செய்துகொண்டுள்ள செயல்களைப் பார்க்கும்போது முன்னவர்களே பரவாயில்லை போலிருக்கிறதே என்று சிலர் முகம் சுருங்கி நிற்கின்றனர்.

ஒரு விதத்தில் தளபதியின் பாணி, அண்ணாவின் பாணியாகத்தான் இருக்கிறது. தந்தை பெரியாரை விட்டுப் பிரிந்தவுடன், திருமூலரின் சொல்லெடுத்து, “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்றார் அண்ணா. எதிரிகள் ஏமாந்த இடம் அதுதான். அண்ணா, சாதி மறுப்பு, பகுத்தறிவுக் கொள்கைகளைக் கைகழுவி விட்டார் என்று எண்ணினர். அண்ணாவின் அறிவுத் திறன் அவர்களுக்குப் புரியவில்லை.

ஒன்றே குலம், எல்லோரும் ஒரே சாதி என்றால் என்ன பொருள்? சாதிகள் இல்லை, சாதி ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்றுதான் பொருள். சாதி மறுப்பைத்தான் அண்ணா திருமூலரின் வரியின் மூலம் சொன்னார். “ஒருவனே தேவன்” என்றாரே, அது கடவுள் ஏற்புதானே என்றால், அதுவும் இல்லை. முப்பத்து முக்கோடித் தேவர்களைச் சுருக்கி, ஒன்று என்னும் எண்ணிக்கையில் கொண்டுவந்து நிறுத்தினார். அது மட்டுமல்லாமல், அந்தத் தேவனை யார் என்றோ, அந்தத் தேவனை வணங்க வேண்டுமென்றோ எப்போதாவது அண்ணா பேசியிருக்கின்றாரா? இல்லை, எங்கும், எப்போதும் அவர் எந்தத் தேவன் குறித்தும் பேசியதே இல்லை. அதனைப் பற்றி மற்றவர்கள்தாம் பேசிக் கொண்டே இருந்தார்களே அல்லாமல், அண்ணா பேசவே இல்லை.

அதே உத்தியைத்தான் 60 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தமிழகம் நம் தளபதியிடம் பார்க்கிறது. முதலமைச்சராகப் பதவி ஏற்றதும், தன்னைப் பற்றிய குறிப்பில் “*we belong to dravidian stock*” என்று பதிவேற்றினார். அதனை ஆதரித்தும், எதிர்த்தும் பலரும் பேசினார்கள். முதல்வர் இன்றுவரையில் ஏதும் பேசவில்லை.

பதவியேற்றவுடன், முதல்வர் பெரியார் திடலுக்கு வந்தார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்னும் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு, மீண்டும் திடலுக்கு வந்தார். எந்த இடத்தில், தலைவர் கலைஞர் தந்தை பெரியாருக்கு உறுதி அளித்தாரோ, அந்த இடத்தில் நம் முதல்வர் நேரில் வந்து நின்றார். அப்படித்தான், யாரும் எதிர்பார்க்காத வகையில், பெரியார் பிறந்த நாளைச் சமூக நீதி நாள் என்று அறிவித்தார்.

அறிவிப்போடு நின்றுவிடவில்லை. அந்த நாளில், அரசு அலுவலகங்களில் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். அந்த உறுதிமொழியில் திராவிடக் கருத்தியல், தமிழ் உணர்வு, சுயமரியாதை, பகுத்தறிவு, ஜனநாயகம், சகோதரத்துவம் எல்லாம் இருக்கின்றன. அதற்கான ஆணையையும் பிறப்பித்து விட்டார்.

சட்டமன்றத்திற்கு வெளியே சிலர் சத்தமில்லாமல் முனகினார்கள். ஆனால் அவர்களின் கட்சியும் கூட, சட்டமன்றத்தில் வரவேற்றுப் பேசியது. பாரதியாருக்கும், வ.உ.சி.க்கும் ஒன்றுமில்லையா என்று சில ‘தேஷபக்தாஸ்’ கேட்டனர். இதுவரையில் எந்த அரசும் செய்யாத சிறப்புகளை வ.உ.சி.க்கும், பாரதிக்கும் முதல்வர் வழங்கித் தீர்மானங்களை நிறைவேற்றினார். முனகல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வந்துவிட்டது.

சமூக நீதியின் சரித்திரம் தொடர்கிறது. பெரியாரின் திராவிடக் கருத்தியலை ஏந்தி, அறிஞர் அண்ணாவின் பாதையில், இன்று இன்னொரு கலைஞராய் எங்கள் தளபதி!

நன்றி: முரசொலி

# திராவிடப் பள்ளி
## இரண்டாம் ஆண்டு தொடக்க விழா






திராவிடப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழா 18.09.2021 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் நடைபெற்றது.

திராவிடப் பள்ளியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி மா.உமாபதி வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் இயக்குனர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமை உரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள்துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களும் திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் சிறப்புரையாற்றி முதலாம் ஆண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்கள். திராவிடப் பள்ளியின் பாடநூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கும், திராவிடப் பள்ளியின் முதலாம் ஆண்டு வெற்றிகரமாக நிறைவடைய உழைத்த பேரவைத் தோழர்களுக்கும் அமைச்சர் சிறப்பு செய்தார். பேரவையின் தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். சேலம் தோழர் அப்பா புவனேஸ்வரி நன்றி உரையாற்றினார்.

திராவிடப்பள்ளி முதலாம் ஆண்டு தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் பள்ளியின் இயக்குனர் மற்றும் தலைமை ஒருங்கிணைப்பாளரிடமிருந்து நிகழ்வின் நிறைவில் சான்றிதழ்களைப் பெற்றனர். ●

# “பெரியார்–அண்ணா பிறந்தநாள் பேரவையின் சிறப்பு நிகழ்ச்சிகள் !”





திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக, 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 , 17 ஆம் நாள்களில் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவில், அவர்களின் படங்களுக்கு மாலை அணிவித்து மிகுந்த உற்சாகமாகச் சிறப்பு செய்தனர், தோழர்கள்.

15-09-2021 அன்று பேரவைத் தலைமை அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் படத்தைப் பொதுச் செயலாளர் முன்னிலையில் புலவர் தி.க.சுப்பிரமணியம் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றித் தோழர்கள் நினைவுரைகளாகக் கலந்துரையாடினார்கள்

நிறைவாகப் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் அறிஞர் அண்ணா குறித்தப் பல்வேறு செய்திகளைத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் தோழர்கள் சுப.வீரபாண்டியன், எழில்.இளங்கோவன், பொள்ளாச்சி மா.உமாபதி, ஆ.சிங்கராயர், “பெல்” இராஜன், அ.லாரன்ஸ், தி.க.சண்முகம், எட்வின் ராஜ், செல்வின், இரா. உமா, சாரதாதேவி, இக்லாஸ், முத்தையா குமரன், கார்த்திக், ஜெய் சூர், மணிமாறன், செந்தாமரைக் கண்ணன், அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

17-09-2021 அன்று தந்தை பெரியார் பிறந்த நாளையொட்டிப் பேரவையின் கொடியை அலுவகத்தின் முன் ஏற்றி வைத்தார் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள். அதைத் தொடர்ந்துத் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்த “சமூக நீதி நாள்'' உறுதி மொழியை ஏற்றுக் கொண்டனர் ஐயா பெரியார் உருவப்படத்தின் முன் நின்று, பேரவைத் தோழர்கள்.

இந்நிகழ்வுகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் தோழர்கள் எட்வின், மு. மாறன், கார்த்திக், முத்தையா குமரன், ஜெய்சூர், மதிவாணன், மதிமாறன் ஆகியோர் ! ●

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை – ஒன்றிய அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



ஒன்றிய அரசின் மக்கள் விரோதப் போக்கை எதிர்த்து இன்று (20.09.2021) காலை 10 மணிக்கு, சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள திராவிட இயக்கத் தமிழர் பேரவை அலுவலகத்திற்கு முன்பு கறுப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் தலைமையில், மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.சிங்கராயர், பொருளாளர் எழில் இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்எட்வின்மற்றும் பேரவை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## முடியட்டும் மோடி ஆட்சி!

தந்தை பெரியார் பிறந்த நாள் இனி சமூகநீதி நாளாகக் கடைப்பிடித்து அதற்குரிய உறுதி மொழியை இனி ஏற்போம் என்று அறிவித்தார் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சில மேதாவிகள் மோடியே சமூக நீதிப் போராளி என்று கதறிப் பார்த்தார்கள். அதற்கு மேல் அவர்களால் ஒன்றும் முடியவில்லை. சமூக நீதி இருக்கட்டும். முதலில் அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்காவது நேர்மையாக இருக்க வேண்டும்.

சமையல் எரிவாயு விலை உயர்வு, பெட்ரோல் டீசல் விலை நாளும் உயர்வு, வேளாண்மையை அழிக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட மூன்று வேளாண் சட்டங்கள், பெகாசஸ் ஒட்டுக் கேட்பு, மக்களின் அன்றாடப் பயன்பாட்டின் முக்கிய அங்கமாக விளங்கும் இரயில்வே, விமான நிறுவனங்கள், நெடுஞ்சாலைகள், எல்.ஐ.சி நிறுவனம், தபால் நிலையம், பி.எஸ்.என்.எல் தொலைத்தொடர்பு என்று ஐம்பது ஆண்டுகளாக அரசுடைமை ஆக்கப் பட்டப் பொதுத் துறை நிறுவனங்களை எல்லாம் அம்பானி, அதானி, டாடா குழுமங்களுக்கு விற்கிறார்கள் என்றால் இதற்குப் பெயர் சமூக நீதியா? அல்லது இது மக்களுக்கான ஆட்சியா?

பஞ்சாப், அரியானா, உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த வேளாண் பெருங்குடி மக்கள் கடந்த ஆண்டு இறுதி முதல் இன்னமும் தங்கள் உரிமைக்காகப் போராடி வருகிறார்கள்.

இது குறித்து மனித உரிமை ஆணையம் கூட கேள்வி எழுப்பியிருக்கிறது.

ஆனால் கிணற்றுக்குள் விழுந்த கல்லைப் போல அசைவற்று இருக்கிறார் பிரதமர் மோடி. தவறியும் கூட ஒரு ஆறுதலுக்காகக் கூட இந்த வேளாண் மக்களை இவர் இன்று வரை பார்த்ததில்லை, பேசியதில்லை. இந்த ஒன்றிய அரசின் ஆட்சி ஒரு மக்கள் விரோத ஆட்சி என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று இருக்கப் போகிறது.

பா.ஜ.க வின் மோடி அரசுக்கு எதிராக அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் தலைவர்கள் கூடிப்பேசி எடுத்த முடிவின்படி அவர்கள் போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அகில இந்திய வேளாண் சங்கம் வரும் 27 ஆம் தேதி கடையடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

போராட்டம் என்பது எதிர்ப்பின் அடையாளம். அதை விட வலிமையான ஆயுதம் மக்களிடம் இருக்கிறது. இனி பாஜக அரசு நாட்டை ஆளக்கூடாது என்று நாட்டு மக்கள் ஒற்றுமையாகச் சேர்ந்து இந்த ஆட்சியை அகற்ற வேண்டும். அடுத்த தேர்தலில் பாஜகவை அகற்ற மக்கள் உறுதி ஏற்க வேண்டும்.

அதற்கானப் பணிகளை இப்போதிருந்தே தொடங்க வேண்டும். இது காலத்தின் தேவை.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்,**
**சாரதா தேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-2472 6408**

# நீட் தொற்றிலிருந்து மாணவர்களைக் காப்போம்!

● மா. உதயகுமார்

செப்டம்பர் 12ஆம் தேதி நீட் தேர்வு நடைபெற்று முடிந்தது. தேர்வு பயத்தால் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தனுஷ் என்ற மாணவரும், தேர்வைச் சரியாக எழுதாததால் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கனிமொழி என்று மாணவரும், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சௌந்தர்யா என்ற மாணவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதேபோல் செங்கல்பட்டு அருகே அனுசியா என்ற மாணவரும் நீட் தேர்வைச் சரியாக எழுதாததால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுத் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.




கடந்த ஆண்டு இதே செப்டம்பர் மாதத்தில் அன்றைய தமிழக முதல்வர் தெரிவித்தக் கணக்கின்படி நீட் தேர்வினால் 13 மாணவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மேலும் 3 மாணவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் வந்து போகிறது.

தேர்வு நடப்பதற்கு முன்பும் தேர்வு நடந்த பின்னும் இப்படி மாணவர்களின் உயிர்கள் பலியாகி இருக்கின்றன.

தேர்வின் முடிவுகள் வெளியானதற்குப் பின்பு இதுபோன்ற உயிரிழப்புகள் நம் சமூகத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது. உடனடியாக இதுபோன்ற துயர நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்த அரசு மனநல ஆலோசகர்கள் மூலம் ஆலோசனை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

மாணவர்களின் உயிர்கள் பறிக்கப்படும் துயரம் ஒருபுறத்தில் என்றால் நீட் தேர்வு எழுதுவதில் நடைபெறும் மோசடிகள் இன்னொருபுறம். இந்தியா முழுவதும் மிகப் பெரும் ஊழல் சந்தையாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மோசடியில் ஈடுபடுகிறவர்கள் கைது செய்யப்படும் காட்சிகளையும் நாம் பார்க்கிறோம். இதற்குப் பின்னால் இருக்கும் பண பேரம் கல்வியின் அவலநிலையையும், நீட் தேர்வின் போலித்தன்மையையும் காட்டுகிறது. இந்த ஆண்டும் வடமாநிலங்களில் பலர் இப்படி மோசடிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜெய்ப்பூரில் மட்டும் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்வு மோசடிக்கு ரூபாய் 30 லட்சம் பேரம் பேசப்பட்டிருக்கிறது. அதேபோல் வாரணாசியில் ஒரு மாணவர் ஆள்மாறாட்ட மோசடியில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டிருக்கிறார். விசாரணையில் மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டு இதே போல் செயல்படும் மற்றவர்களையும் கைது செய்ய பாட்னா, லக்னோ போன்ற நகரங்களிலும் காவல்துறையினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். இப்படிப்பட்டத் தேர்வு உலகில் வேறு எந்த நாட்டிலாவது நடப்பதையும் அதையொட்டி இத்தனை மரணங்களும் கைதுகளும் அரங்கேறும் காட்சிகளைப் பார்க்க முடியுமா? இந்தப் பெருமை எல்லாம் நீட் தேர்வை மட்டுமே சேரும்.

இத்தேர்வின் மூலம் சாதிய, பாலின, வர்க்க ஏற்றத்தாழ்வுகள் பெருகிக்கொண்டே வருகின்றன என்பதையும் கல்வியாளர்களின் ஆய்வின் மூலம் அறியமுடிகிறது. இவ்வளவு செலவு செய்து பயிற்சி எடுக்க வைத்து, அதில் வெற்றி பெறுவது என்பதும் கேள்விக்குறியாகிய நிலையில், பெற்றோர்கள் பெண் குழந்தைகளை மருத்துவராக்கும் நினைப்பையே விட்டுவிடும் போக்கு அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகிறது.

இதுபோன்ற மரணங்களும் சமூக அநீதிகளும் மற்ற மாநிலங்களில் நடைபெறவில்லையா என்று பார்த்தால், இதைவிட மோசமான நிலையில் நடைபெறுகின்றன. ஆனால் சமூக நீதிக்கானச் சமரசமற்றக் குரலை எழுப்ப அந்த மாநிலங்களில் திராவிட இயக்கம் இல்லை. தமிழ்நாடு மட்டும்தான் இதற்கு எதிராக வினையாற்றி வருகிறது.

நீட் தேர்வைத் தமிழ்நாட்டில் ஒழிப்பதற்காகத் திமுக அரசு அதற்கென நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுச் சட்டமன்றத்தில் நீட் விலக்கு பெறுவதற்கான மசோதாவை நிறைவேற்றி இருக்கிறது.

தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூகநீதி நாளாக நாம் கொண்டாடி, ஏற்ற உறுதிமொழி சமத்துவ சமூகத்தைப் படைப்பதற்காகத்தான்.

அந்த உறுதி மொழியின்படி நாம் அனைவரும் உடனடியாக நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற்று சமூகநீதியை நிலைநாட்டத் தொடர்ந்து போராட வேண்டும். தமிழ்நாடு அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கும் நீட் விலக்கு மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றால்தான், நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறமுடியும்.

அரசு சட்டப்பூர்வமான வழியில் விரைந்து நடவடிக்கை எடுத்து வந்தாலும், மக்களின் ஆதரவு பெருமளவில் ஏற்படும்போதுதான் அரசின் சட்டப்பூர்வச் செயல்பாட்டிற்கும் வெற்றி கிடைக்கும். எனவே நீட் விலக்கு பெறும் மசோதாவிற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கும் வரை அதை வலியுறுத்தித் தொடர்ந்து குரலெழுப்ப வேண்டியதும் மக்களிடத்தில் பரப்புரை செய்ய வேண்டியதும் நம் அனைவரின் கடமையும் ஆகும். நீட் தொற்றிலிருந்து மாணவர்களைக் காப்போம்!

## தற்கொலை எதற்கும் தீர்வாகாது!

தேர்வு பயத்தாலும், தோல்வியை வென்றெடுக்க முடியாமலும் மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளக்கூடாது.

“தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா?”

வாழ்க்கை வாழ்வதற்காகத்தான்.

“விழியே! விழியே! இமையே தீயும்போதும் கலங்காதிரு!” மாணவர்கள் இளைஞர்கள் விழிப்போடும் துணிவோடும் நடைபோட வேண்டும். மேடு பள்ளங்களைப் பற்றி கவலை கொள்ளக்கூடாது.

நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்க 104 என்ற தொலைபேசி எண் உருவாக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களும் மாணவர்களும் அரசின் இச்சேவையைப் பயன்படுத்திக்கொண்டு நல்வாழ்வு பெற்றிடல் வேண்டும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian